பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 10 2025 FRIDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மீனவர்கள் நலன் குறித்து, இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூர்யாவுடன் விரிவாக விவாதித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழக சட்டப்பேரவை மறுதேதி குறிப்பிடாமல் இன்று ஒத்தி வைக்கப்பட்டது.
- ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட 6 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

மீனவர்கள் நலன் குறித்து இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூர்யாவுடன் விரிவாக விவாதித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இலங்கை பிரதமருடன் பேச்சு நடத்திய பின்னர், சமூகவலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

கல்வி, தொழில்நுட்பம், புத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின் போது, விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

சரக்கு போக்குவரத்திற்கான செலவினங்கள் குறைந்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சரக்கு போக்குவரத்திற்கான செலவினங்கள் நடப்பாண்டு இறுதிக்குள் ஒற்றை இலக்கமாக குறையும் என்று தெரிவித்தார்.

ஏற்றுமதியை அதிகரிக்க இது உதவிடும் என்றும் அவர் கூறினார்.

மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>><<<<

விவசாயிகள் நலனுக்கான இரண்டு புதிய திட்டங்களின் செயலாக்கம் குறித்து, மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

தானிய உற்பத்தி வேளாண் மேம்பாட்டுத் திட்டம், பருப்பு உற்பத்தியில் சுயசார்பு இயக்கம் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்த திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு அமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இந்த திட்ட செயலாக்கத்தில் தொடர்புடைய 11 துறைகளின் அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

>>>><<<<

தமிழக சட்டப்பேரவை மறுதேதி குறிப்பிடாமல் இன்று ஒத்தி வைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய இந்த கூட்டத்தொடரில், நடப்பு நிதியாண்டின் கூடுதல் செலவினங்களுக்கான துணை மதிப்பீடுகள் நிறைவேற்றப்பட்டன.

16 மசோதாக்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

>>>>>><<<<

மக்களின் பிரச்சினைகளுக்கு அஇஅதிமுக எப்போதும் குரல் கொடுத்து வருவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அஇஅதிமுகவின் 54வது ஆண்டு தொடக்க விழாவை ஒட்டி, சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக கூட்டணி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<

கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழுவின் முக்கிய ஆவணங்கள் எரிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், விசாரணை முடியும் முன்னரே, வழக்கு தொடர்பான ஆவணங்களை எரிப்பதற்கு அனுமதி அளித்தது யார் என்று வினவியுள்ளார்.

இந்த சம்பவத்தில் திமுக அரசு எதையோ மறைக்க முயற்சிப்பதையே இது எடுத்துக்காட்டுவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு திமுக அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<

ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட 6 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 48 செகண்ட்ஸ்)

அரபிக்கடல் பகுதியில் நாளை, குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 25 செகண்ட்ஸ்)

>>>>>><<<<

தீபாவளி பண்டிகையை ஒட்டி, விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் இன்று நடைபெற்ற ஆட்டுச் சந்தையில் 5 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றது.

இதனால் விவசாயிகள் மகிழச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சுரேஷ் 35 செகண்ட்ஸ்)

>>>>>><<<<

கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த காட்டு யானை இன்று பிடிபட்டது.

இதன் காரணமாக, தொண்டாமுத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் - ஹரிஹரன் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் வெற்றி பெற்றவர்களுக்கான பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி. சிவ சௌந்தரவள்ளி இன்று வழங்கினார்.

>>>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி. பிரியா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<

தீபாவளி பண்டிகையை ஒட்டி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று 2-1 என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

Gurjot Singh மற்றும் Rosan Kujur தலா ஒரு கோல் அடித்தனர்.

>>>>><<<<

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 13-15, 15-9, 15-10 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Saki Matsumoto-வை வென்றார்.

>>>>><<<<

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Zoravar Singh Sandhu இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

Greece-ன் ஏதென்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<

Jinan ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – சீனாவின் Zheng Wushuang இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 0-6, 10-6 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Eudice Chong – சீனாவின் Shuo Feng இணையை வென்றது.

>>>>><<<<

சீனாவின் Gansu-க்கு எதிரான மூன்றாவது ஹாக்கிப் போட்டியில், இந்தியா-ஏ அணி 8-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை இந்தியா 3-0 என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றி முன்னிலை பெற்றுள்ளது.

நான்காவது மற்றும் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.

>>>>><<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Alap Mishra காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-10 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Tung Jui Hsu-வை வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரகு மாரிசாமி, 21-17, 21-10 என்ற செட்கணக்கில் மலேசியாவின் King Kien Hwa-வை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Dingku Singh - Amaan Mohammad இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில், இந்தியா - உஸ்பெகிஸ்தானை எதிர்த்து ஆடிவருகிறது.

>>>>>END<<<<